
Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 58 | உள்ளூர் - 27.02.2026 | வெள்ளி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 58 | வெளியூர் - 28.02.2026 | சனி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**மீண்டும் மீண்டும் ஒரே பிரச்சனை: ஜோதிட காரணங்கள்!**

**மத்திய அரசில் தொழில் 50 பழகுநர் காலியிடங்கள்!**

**3 முறை முதல்வர் ஓபிஎஸ் திமுகவில் சரண்!**

**மதுபான ஊழல்; கெஜ்ரிவால் விடுதலை!**

## இஸ்ரேல் பயணத்தை முடித்து நாடு திரும்பினார் பிரதமர் மோடி!

புதுடில்லி பிப். 27–

2 நாள் இஸ்ரேல் பயணத்தை முடித்துக் கொண்டு, இன்று அதிகாலை பிரதமர் மோடி நாடு திரும்பினார்.

இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் மேற்கு ஆசிய நாடான இஸ்ரேலுக்கு பிரதமர் மோடி சென்றார். அங்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உற்சாக வரவேற்பு அளித்தார். இதையடுத்து, இஸ்ரேல் பார்லியில் சிறப்பு



விருந்தினராகச் சென்று உரையாற்றிய பிரதமர் மோடிக்கு, அந்நாட்டு சபாநாயகர் உயரிய விருதை அளித்து கவுரவித்தார்.

இதைத்தொடர்ந்து, ஏஐ, கல்வி, உற்பத்தி, கலாசாரம், கடல்சார் பாரம்பரியம், விவசாயம் உள்ளிட்ட 17 முக்கிய துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. 2 நாள் பயணத்தை முடித்துக் கொண்டு இஸ்ரேலில் இருந்து நேற்றிரவு புறப்பட்ட பிரதமர் மோடி, இன்று அதிகாலை தாயகம் வந்தடைந்தார். அவரை அதிகாரிகள் வரவேற்றனர்.

## தாய்க் கழகத்துக்கு ஓ.பன்னீர்செல்வத்தை வரவேற்கிறேன் - மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, பிப். 27–

தமிழ்நாடு முன்னாள் முதல்–அமைச்சரும், முன்னாள் அதிமுக ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம், இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவரும், முதல்– அமைச்சருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தன்னை திமுகவில் இணைத்துக் கொண்டார். அவருக்கு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் திமுக துண்டை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

இந்த நிலையில் தாய்க் கழகத்துக்கு ஓ.பன்னீர்செல்வத்தை வரவேற்கிறேன் என்று முதல்–அமைச்சர்



மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–

முன்னாள் முதல்–அமைச்சரும் அருமைச் சகோதரருமான ஓ.பன்னீர்செல்வம் தாய்க்கழக மாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்துள்ளார். அவரை வருக வருக என வரவேற்கிறேன். திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவரின் பெயரைத் தாங்கிய அவர் திராவிட இயக்கக் கொள்கை காக்கும் நம் பேரியக்கத்தில் இணைந்துள்ளார். 2026 சட்டமன்றத் தேர்தல் என்பது தமிழ்நாட்டுக்கும் பாசிச பாஜகவுக்கும் இடையிலான ஜனநாயகப் போர். இதனை உணர்ந்துதான் பல்வேறு ஜனநாயக சக்திகளும் கழகக் கூட்டணியில் இணைந்து வருகிறார்கள். நம்மோடு இணைந்துள்ள சகோதரர் ஓ.பன்னீர்செல்வம் அன்பானவர், பண்பானவர், அடக்கமானவர்! அவரது வரவு நல்வரவாகட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கோயம்புத்தூரில் மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்புகளை தானம் வழங்கிய சிறுமி வெண்பாவின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது பெற்றோர் கோயம்புத்தூர் மாநகராட்சி நகரமைப்பு குழு தலைவர் சோமு (எ) சந்தோஷ் – திருமதி சுகன்யா ஆகியோரை சந்தித்து, சிறுமியின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து, உறுப்பு தானம் வழங்கியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி ஆகியோர் உடனிருந்தனர்.

## இப்போது கூட வாக்காளர் பட்டியலுக்கு விண்ணப்பிக்க முடியும்- தேர்தல் ஆணையர்!

சென்னை, பிப். 27–

சென்னையில் தமிழக சட்டசபை தேர்தல் தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

* சமூக வலைத்தளங்களில் வதந்தி பரப்புவோர் கண்காணிக்கப்படுவர்.

* தேர்தலில் பதிவாகும் வாக்குப்பதிவு நிலவரத்தை ECINET செயலியில் அறியலாம்.

* SIR பணியில் சிறப்பாக செயல்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை தமிழ்நாடு நினைவில் வைத்துக்கொள்ளும்.

* தமிழ்நாட்டின் இறுதி வாக்காளர் பட்டியலில் ஆண் வாக்காளர்கள் 2 கோடியே 77 லட்சத்து 38 ஆயிரத்து 925 பேர் உள்ளனர்.

* கடைசி 2 மின்னணு வாக்கு எந்திரங்களில் வாக்கு எண்ணுவதற்கு முன்பு தபால் வாக்குகள் எண்ணி முடிக்கப்படும்.

* வேட்பாளர்கள் யாராவது ஆட்சேபம் தெரிவித்தால் VVPAT ரசீது எண்ணப்படும்.



* படிவம் 6 மூலமாக இப்போது கூட வாக்காளர் பட்டியலுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றார்.

## தி.மு.க. ஆட்சியில் தனிநபர் வருமானம் உயர்வு!


சென்னை, பிப். 27–

தி.மு.க. சார்பில் சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டு இருப்பதாவது:–

வளர்ச்சி அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலான ஆட்சி, அதுவே திராவிட மாடல்.

கடந்த 4 ஆண்டுகளில் (2021–2025), தனிநபர் வருமானம் ரூ.1.78 லட்சம் உயர்ந்து, வரலாற்றிலேயே அதிகமான ரூ.3.62 லட்சம் என்ற நிலையை எட்டியுள்ளது. இது தமிழ்நாடு வரலாற்றில் மிக வேகமான தனிநபர் வருமான வளர்ச்சி காலமாக (19.4சதவீதம்) பதிவாகியுள்ளது. 20 ஆண்டுகளாக ஏற்பட்ட முன்னேற்ற அளவிற்கு சமமாக, கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் தனிநபர் வருமானம் முன்னேறி சாதித்துள்ளது.

தொழில் விரிவாக்கம், முதலீட்டை




மையமாகக் கொண்ட வளர்ச்சி, மற்றும் மக்களின் வாங்கும் திறனை உயர்த்தும் நலத்திட்டங்கள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்திய ஆட்சியின் நேரடி விளைவுதான் இந்த முன்னேற்றம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பற்றி எரியும் இந்தியாவின் அண்டை நாடுகள்!!

# பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் இடையே

## நேரடி போர் தொடக்கம்!!

காபூல், பிப். 27–

இந்தியாவின் அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு இடையே கடுமையான போர் வெடித்துள்ளது. இரண்டு நாடுகளும் மாறி மாறி தாக்குதல்களை நடத்தி வருகின்றன. பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானின் தாலிபன் அரசுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் நீடித்து வருகிறது. தாலிபன்கள் பயங்கரவாதிகளை அனுப்புவதாகவும் நாட்டில் அமைதியை சீர்குலைப்பதாகவும் பாகிஸ்தான் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. இந்த குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் கடந்த ஓராண்டு காலமாகவே இரு நாடுகளும் அவ்வப்போது மோதி கொள்ளும். வழக்கமாக மோதல் நடக்கும் பின்னர் அமைதி ஆகிவிடும் ஆனால் தற்போது இரு நாடுகளுக்கும் இடையே மிகத் தீவிரமான போர் தொடங்கியிருக்கிறது.

ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்களை குறிவைத்து பாகிஸ்தான் வான் வழி தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தான் ராணுவ வீரர்களின் முகாம்கள் மீது குண்டுமழை பொழிந்துள்ளது .இதில் 50–க்கும் மேற்பட்ட



ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. தற்போது இரண்டு நாடுகளும் தாக்குதல் நடத்திக் கொள்வதால் பெரிய அளவிலான பதற்றம் உண்டாகி இருக்கிறது. இந்த சூழலில் பாகிஸ்தான் பிரதமர் ஆப்கானிஸ்தானின் காபுல், கந்தஹார் ஆகிய நகரங்களை குறிவைத்து தங்கள் நாட்டு ராணுவம் வான்வழி தாக்குதல் நடத்துவதாக தெரிவித்திருக்கிறார். இது தவிர கைபர் பக்துன்குன்வா பிராந்தியத்தில் இருக்கும் பல்வேறு பகுதிகளிலும் ஆப்கானிஸ்தானின் தாலிபன் படைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்திருக்கிறது.

பாகிஸ்தான் பாதுகாப்பு துறை அமைச்சர் ஆப்கானிஸ்தான் உடனான பிரச்சனையை சரிசெய்ய நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம் ஆனால் அது எதுவும் கை கொடுக்கவில்லை இதனால் தான் தாக்குதல் நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம் எனக் கூறியிருக்கிறார். தற்போது இது ஒரு நேரடி போர் என அவர் பிரகடனம் செய்திருக்கிறார். இதற்கிடையே ஆப்கானிஸ்தான் முன்னாள் அதிபர் ஹமீது கர்சாய் தங்களுடைய நாட்டை பாதுகாக்க எந்த எல்லைக்கும் செல்வோம் பாகிஸ்தானின் தாக்குதலை பொறுத்துக் கொள்ள மாட்டோம் பதில் தாக்குதல் நடத்துவோம் என கூறியிருக்கிறார். இரண்டு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து இந்த மோதல் போக்கு நிலவி வருவது சர்வதேச அளவில் ஒரு பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இரு நாடுகளும் நடத்தி கொள்ளும் தாக்குதல்களில் அப்பாவி மக்கள் தான் காயமடைந்தும் கொல்லப்பட்டும் வருகின்றனர். இதற்கிடையே ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் போரை நிறுத்தி சமாதானம் அடைய வேண்டும் என கேட்டு கொண்டுள்ளன. குறிப்பாக ரஷ்யா இரு நாடுகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்யவும் தயராக இருப்பதாக தெரிவித்துள்ளது.

## பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதில் கன்னியாகுமரி சாதனை: மு.க.ஸ்டாலின் விருது வழங்கி பாராட்டு!

சென்னை, பிப். 27–

பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதில் மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்த கன்னியாகுமரி மாவட்டத்திற்கு "மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு விருது" வழங்கப்பட்டது. இதற்கான பாராட்டுச் சான்றிதழை கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் ஆர். அழகுமீனாவிடம் தமிழக முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கி கவுரவித்தார்.

விருது பெற்ற பின் பேசிய மாவட்ட கலெக்டர் அழகுமீனா, இந்த சாதனை குறித்து கூறியதாவது: கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலின விகிதம் குறைவாகக் கண்டறியப்பட்ட தோவாளை, நாகர்கோவில், ராஜாக்கமங்கலம், தக்கலை, மேல்புறம் ஆகிய 5 வட்டாரங்களில் தீவிர விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் பாலின விகிதம் 965–லிருந்து 990.6 ஆக அதிகரித்துள்ளது.




பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்: இந்த திட்டத்தின் கீழ் பெண் சிசுக்கொலைத் தடுப்பு மற்றும் பெண் கல்வியை உறுதி செய்யப் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கர்ப்ப கால கண்காணிப்பு: அனைத்து கர்ப்பங்களும் 100 சதவீதம் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்து, PICME எண் மூலம் பிரசவம் வரை தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஸ்கேன் மையங்கள் ஆய்வு: மாவட்டத்தில் உள்ள 233 ஸ்கேன் மையங்களில் PCPNDT சட்டத்தின்படி கருவின் பாலினம் கண்டறிதல் தடுக்கப்படுவதை உறுதி செய்யத் தொடர் ஆய்வுகள் நடத்தப்பட்டன.

விழிப்புணர்வு நிகழ்வுகள்: பள்ளிகளில் போக்சோ (POCSO) சட்டம் குறித்த விழிப்புணர்வு, மற்றும் பெண் குழந்தைகள் பிறந்தால் மரக்கன்றுகள் வழங்கி கவுரவித்தல் போன்ற புதுமையான முயற்சிகள் எடுக்கப்பட்டன. சமூகநலத்துறை, சுகாதாரத்துறை, காவல்துறை, பள்ளிக்கல்வித்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ICDS) ஆகிய துறைகள் ஒன்றிணைந்து செயல்பட்டதே இந்த வெற்றிக்குக் காரணம் ஆகும். இதற்காக மாவட்ட நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் சார்பில் தமிழக அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் என். முருகானந்தம், சமூக நலத் துறை முதன்மைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளீதரன் மற்றும் சமூக நல இயக்குநர் சங்கீதா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 27.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 15-ம் தேதி

## அமெரிக்கா விட்டு வெளியேறும் இந்தியர்கள்.. நேரா பெங்களூரில் லேண்டிங்..





கடந்த 30 ஆண்டுகளில் முதல் முறையாக அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, கனடா போன்ற வல்லரசு நாடுகளில் இருந்து இந்தியர்கள் தானாக முன்வந்து தாய் நாட்டிற்கு திரும்பி வருகின்றனர். என்ஆர்ஐ–களின் இந்த திடீர் முடிவுக்கு டிரம்ப்–ன் கட்டுப்பாடுகளோ, விசா பிரச்சனையோ, வேலைவாய்ப்பு இழப்பதாலோ இந்தியாவுக்கு வரவில்லை. மாறாக, என்ஆர்ஐ–கள் அமெரிக்காவில் பெற்ற வெற்றி, பணம், அனுபவம் ஆகியவற்றை இந்தியாவில் பயன்படுத்தவு முடிவு செய்துள்ளதால் ஏற்படும் முக்கியமான திருப்பம்.

வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் பெரும்பாலானோர் மும்பை, டெல்லி, ஹைதராபாத் போன்ற நகரங்களை தேர்ந்தெடுக்கவில்லை. அனைவரும் ஒரே இடத்தை தேர்ந்தெடுத்துள்ளனர், அது தான் பெங்களூர். ஆனால் ஏன். சமுக வலைத்தளத்தில் "Back to India" என்ற கம்யூனிட்டி–யில் சுமார் 25,000க்கும் மேற்பட்ட NRIகள் இந்தியாவுக்கு திரும்புவதற்கு திட்டமிடுகின்றனர். அவர்களின் பதிவுகளை பார்க்கும்போது பெங்களூரு மீதான ஆர்வம் மிக அதிகமாக உள்ளது. பெங்களூரு ஏன் பெஸ்ட் சாய்ஸ்? முதலில், இங்கு க்ளைமேட் ஆண்டு முழுவதும் இதமாக உள்ளது. கடற்கரை, மலைப்பகுதிகள், விமான நிலையங்கள் ஆகிய அனைத்தும் ஒரு 2 மணி நேர பயணத்தில் சென்றடையும் தூரத்தில் உள்ளன. மிக முக்கியமாக, உலகின் முன்னணி நிறுவனங்களின் 870க்கும் மேற்பட்ட குளோபல் கேபபிலிட்டி சென்டர்கள் (GCCs) இங்கு அதிகம் உள்ளன.

கோல்ட்மன் சாக்ஸ், கூகுள், ஜே.பி.மார்கன் போன்றவை மூத்த பதவிகளுக்கு ஆட்களை தேர்ந்தெடுக்கின்றன. இதனால் NRIகள் அமெரிக்காவில் பெற்ற சம்பளத்திற்கு கிட்டத்தட்ட இணையான அல்லது சிறிய அளவில் குறைந்த வருமானத்தை பெறும் வாய்ப்பு தற்போது எளிதாக கிடைக்கிறது. முன்பெல்லாம் இந்தியர்கள் எங்கு அதிக சம்பளம் கிடைக்கும் என்பதை மட்டுமே பார்த்தனர். ஆனால் இப்போது "பணம் எங்கு நன்றாக வேலை செய்கிறது" என்பதை பார்க்கின்றனர். பெங்களூரு இதற்கு சிறந்த இடமாக மாறியுள்ளது. இங்கு வாழ்க்கைத் தரம், வேலை வாய்ப்பு, முதலீட்டு வாய்ப்புகள் ஆகியவை சிறப்பாக உள்ளன. இதற்கு ஏற்றார் போல் சம்பளமும் கிடைக்கும் காரணத்தால் வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்கு வரும் மக்களுக்கு பெங்களூர் முக்கிய விருப்பமாக உள்ளது. இந்த திருப்பம் இந்தியாவின் பொருளாதார மாற்றத்தை காட்டுகிறது. NRIகள் திரும்பி வருவது பெங்களூருவை மட்டும் அல்லாமல் நாட்டின் வர்த்தக சந்தை முதலீட்டு சந்தையை வலுப்படுத்துகிறது. இது வேலைவாய்ப்புகள், ரியல் எஸ்டேட், ஸ்டார்ட்அப் சூழல் ஆகியவற்றை மேம்படுத்தும்.

# நாடு முழுவதும் ஏப்ரல் 1 முதல் E20 பெட்ரோல் கட்டாயம்..! மத்திய அரசு அதிரடி உத்தரவு..!




புதுடெல்லி, பிப். 27–

பெட்ரோல் வாகனங்களை பயன்படுத்துபவர்களுக்கு முக்கிய செய்தி வந்துள்ளது.. இனிமேல், பழைய வாகனங்களின் பராமரிப்பில் நீங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் நாட்டில் தூய பெட்ரோலுக்குப் பதிலாக, எத்தனால் கலந்த பெட்ரோல் மட்டுமே கிடைக்கும். ஏப்ரல் 1, 2026 முதல், நாடு முழுவதும் விற்கப்படும் பெட்ரோலில் 20 சதவீதம் வரை எத்தனால் கலக்கப்பட வேண்டும். அதேபோல், அந்த பெட்ரோலில் குறைந்தபட்ச ஆராய்ச்சி ஆக்டேன் எண் (RON) 95 இருக்க வேண்டும். இந்த முடிவு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. பிப்ரவரி 17 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில் எண்ணெய் அமைச்சகம் இதை உறுதிபடுத்தி உள்ளது. இந்திய தரநிலைகள் பணியகம் நிர்ணயித்த தரநிலைகளின்படி எத்தனால் கலந்த பெட்ரோலை வழங்க எண்ணெய் நிறுவ னங்களுக்கு உத்தரவிட்டது. இருப்பினும், சிறப்பு சூழ்நிலைகளிலும் குறிப்பிட்ட பகுதிகளுக்கும் தற்காலிக விலக்குகள் வழங்கப்படலாம் என்றும் அது கூறியது.

**என்ன மாறப்போகிறது?**

இனிமேல், பெட்ரோலில் 20 சதவீதம் வரை எத்தனால் இருக்கும். இந்தக் கலவை பொதுவாக E20 (E20 பெட்ரோல்) என்று அழைக்கப்படுகிறது. E20 ஏற்கனவே நாட்டின் பெரும்பாலான பெட்ரோல் நிலையங்களில் கிடைக்கிறது. எனவே இது நுகர்வோருக்கு திடீர் மாற்றமாகத் தெரியவில்லை. மற்றொரு முக்கியமான காரணி என்னவென்றால், பெட்ரோலில் குறைந்தபட்சம் 95 RON இருக்க வேண்டும். இது இயந்திர பாதுகாப்பு மற்றும் செயல்திறனுக்கு அவசியம்ன்

பெட்ரோலில் எத்தனால் கலப்பதன் மூலம் 2014–15 முதல் இந்தியா ரூ. 1.40 லட்சம் கோடிக்கு மேல் அந்நியச் செலாவணியைச் சேமித்துள்ளதாக எண்ணெய் அமைச்சகம் தெரிவித்துள்ளது. 2023 மற்றும் 2025க்கு இடையில் தயாரிக்கப்படும் பெரும்பாலான வாகனங்கள் E20 எரிபொருளுடன் இணக்கமாக உள்ளன. இந்த வாகனங்களில் பெரிய சிக்கல்கள் இருக்காது என்று தொழில் நிபுணர்கள் கூறுகிறார்கள். இருப்பினும், பழைய வாகனங்களில் சில மாற்றங்கள் காணப்படலாம். மைலேஜ் 3 முதல் 7 சதவீதம் வரை குறையலாம். சில ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் கூறுகள் வேகமாக தேய்ந்து போகலாம். ஏனென்றால் எத்தனால் தூய பெட்ரோலை விட ஓரளவு அரிக்கும் தன்மை கொண்டது. எனவே, பழைய மாடல் வாகனங்களை வைத்திருப்பவர்கள் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. ஜூன் 2022க்குள் பெட்ரோலில் 10 சதவீத எத்தனால் கலத்தல் என்ற இலக்கை இந்தியா ஐந்து மாதங்களுக்கு முன்னதாகவே அடைந்துள்ளது. இந்த சாதனையின் மூலம், 2030 முதல் 2025–26 வரை 20 சதவீத எத்தனால் கலத்தல் இலக்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

# பிரதமர் மோடி வருகை தரும் நிலையில் மத்திய அரசு பள்ளிக்கு வெடிகுண்டு மிரட்டல்!




புதுச்சேரி, பிப். 27–

புதுச்சேரியில் கவர்னர் மாளிகை, டி.ஜி.பி., அலுவலகம், தலைமைச் செயலகம், கலெக்டர் அலுவலகம், ஜிப்மர், தனியார் ஓட்டல்கள் உள்ளிட்டவைகளுக்கு கடந்த சில மாதங்களாக தொடர்ந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் இ–மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு தூதரகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் வந்தது.

இந்நிலையில், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் புதுச்சேரி காலாப்பட்டில் இயங்கும் ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளி இ–மெயில் ஐ.டி.க்கு, வெடிகுண்டு மிரட்டல் செய்தி வந்திருந்தது.

அதில் பிரபல நகைச்சுவை நடிகரின் பேத்தி என்றும் தனக்கு நடந்த பாலியல் தொல்லை குறித்து போலீசில் புகார் அளித்தும் அவர் அரசியல் பிரமுகர் என்பதால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதற்காக மும்பை கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளேன். எனது நீதிக்காக நக்சலைட் மாணவர் பிரிவு உதவி செய்து வருகிறது. அனைவரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நவோதயா பள்ளியில் வெடிகுண்டு வைத்துள்ளேன். இவ்வாறு அந்த இ–மெயிலில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதைகண்டு அதிர்ச்சி அடைந்த பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள், உடனடியாக காலாப்பட்டு போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து போலீசார் பள்ளிக்கு விரைந்து சென்று மோப்ப நாய் உதவியுடன் பள்ளியின் அனைத்து இடங்களிலும் அங்குலம் அங்குலமாக தீவிர சோதனை மேற்கொண்டனர்.

ஆனால் வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. அதன் பிறகே வெடிகுண்டு மிரட்டல் வதந்தி என்பது தெரியவந்தது. சோதனை போது மாணவர்கள் அனைவரும் பள்ளியின் விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

வெடிகுண்டு மிரட்டல் குறித்து காலாப்பட்டு மற்றும் சைபர் கிரைம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

நாளை மறுதினம் (ஞாயிற்றுக்கிழமை) பிரதமர் மோடி புதுச்சேரிக்கு வருகை தர உள்ள நிலையில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நவோதயா வித்யாலயா பள்ளிக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து புதுச்சேரி போலீசார் பாதுகாப்பு பணியை தீவிரப்படுத்தியுள்ளனர்.

பிரதமர் மோடி வருகை தர உள்ள விமான நிலையம், லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானம் மற்றும் புதுச்சேரி நகரின் முக்கிய பகுதிகளை போலீசார் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வந்துள்ளனர். புதுச்சேரி எல்லை பகுதி மற்றும் முக்கிய சந்திப்பு பகுதிகளில் வாகன சோதனை நடத்தி வருகின்றனர். பிரதமர் மோடி வருகையையொட்டி புதுச்சேரியில் 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்

# ஜெய்சல்மேர் Chadar Mahotsav: மார்ச் 7 அன்று உலகம் முழுவதும் 1.08 கோடி பக்தர்கள் ஒருமித்து Dada Guru Ektisa Path பாராயணம்



சென்னை , பிப். 27–

மார்ச் 68, 2026 வரை நடைபெறும் Chadar Mahotsav–ஐ Mohan Bhagwat தொடங்கி வைக்கிறார். Dada Gurudev Shri Jindattsuri நினைவாக நடைபெறும் இந்த மூன்று நாள் ஆன்மிக விழாவில், மார்ச் 7 அன்று உலகம் முழுவதும் 1 கோடியே 8 லட்சம் பக்தர்கள் ஒரே நேரத்தில் Dada Guru Ektisa Path பாராயணம் செய்யும் வரலாற்றுச் சிறப்பு மிக்க Mahasankalpam நடைபெற உள்ளது. சுமார் 20,000 பக்தர்கள் நேரில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

Chadar Mahotsav Samiti தலைவர் Mangal Prabhat Lodha தெரிவித்ததாவது, "இது ஒரு மத சடங்காக மட்டும் இல்லாமல், உலகளாவிய ஆன்மீக ஒற்றுமையை உருவாக்கும் இயக்கமாகும். ஒரே நேரத்தில் நடைபெறும் Ektisa Path பாராயணம் உலகம் முழுவதும் ஆன்மீக அதிர்வை உருவாக்கும்" என்றார். தேசிய தலைவர் Prakash Chandra Lodha, மார்ச் 7 Mahasankalpam இந்த Mahotsav–இன் முக்கிய நிகழ்வாக இருக்கும் என குறிப்பிட்டார். 871 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக Chadar–க்கு Vidhi–Vidhan Abhishek நடைபெறுகிறது. ஜெய்சல்மேர் கோட்டையிலிருந்து Varghodo ஊர்வலமாக Chadar கொண்டு வரப்படும். மார்ச் 8 அன்று Upadhyay Mahendra Sagar Maharaj அவர்களுக்கு Acharya Pad வழங்கப்படுவதுடன், பல ஆன்மிக தலைவர்கள் மற்றும் 400–க்கும் மேற்பட்ட சந்நியாசிகள் இந்த விழாவில் பங்கேற்கின்றனர்.

# ஏசியன் பெயிண்ட்ஸ் 'ரங் தே இந்தியா' கிரிக்கெட் கீதம் வெளியீடு; Sunidhi Chauhan, Vishal Dadlani குரலில் கிரிக்கெட் உற்சாகம்




மதுரை, பிப். 27–

மதுரை ஏசியன் பெயிண்ட்ஸ்'ரங் தே இந்தியா' என்ற சக்திவாய்ந்த கிரிக்கெட் கீதத்தை வெளியிட்டு, கிரிக்கெட் தருணங்களின் வண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கொண்டாடுகிறது. இந்திய ஹோம் கிரிக்கெட் அதிகாரப்பூர்வ வண்ண கூட்டாளியாக Board of Control for Cricket in India (பிசிசிஐ) உடன் இணைந்துள்ள இந்த முயற்சியில், சமீர் உதின் இசையமைப்பில் Sunidhi Chauhan மற்றும் Vishal Dadlani ஆகியோர் குரல் கொடுத்துள்ளனர். போட்டி நாட்களில் வீடுகள் சிறிய அரங்கங்கள் மாறும் மகிழ்ச்சியை இந்த கீதம் வெளிப்படுத்துகிறது.

இந்த பிரச்சாரம் குறித்து பேசிய ஏசியன் பெயிண்ட்ஸ் நிர்வாக இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான அமித் சிங்கிள், "கிரிக்கெட் இந்தியாவை பிராந்தியங்களும் தலைமுறைகளையும் தாண்டி ஒன்றிணைக்கும் அரிய சக்தி கொண்டது. வண்ணம் என்பது உணர்ச்சியின் வெளிப்பாடு; அந்த உணர்வுகளை இந்த கீதம் வீடு தோறும் கொண்டு செல்கிறது," என்றார்.

கீதம் குறித்து கனெக்ட் நிறுவனத்தின் சிசிஓ நெவில் ஷா கூறுகையில், "ஏசியன் பெயிண்ட்சுக்கு வண்ணம் என்பது அலங்காரம் மட்டுமல்ல, அது வெளிப்பாடு. இந்த கிரிக்கெட் சீசனில் ரசிகர்கள் உணர்ச்சிகளுடன் இணைவதற்கான இயல்பான முயற்சியாகவே இந்த கீதம் உருவானது," என்றார். இந்த பிரசாரம், இந்தியாவின் கிரிக்கெட் உணர்வை வீடுகளிலும் இதயங்களிலும் கொண்டாடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

# ராஜ்யசபா தேர்தல்; மனு தாக்கல் துவக்கம்!



சென்னை, பிப். 27–

தமிழகத்தில் காலியாகும் ஆறு ராஜ்யசபா எம்.பி., பதவிகளுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்று துவங்கியது.


தி.மு.க.,வின் சிவா, என். ஆர்.இளங்கோ, செல்வராஜ், கனிமொழி சோமு; அ. தி.மு.க.,வின் தம்பிதுரை, த.மா.கா., தலைவர் வாசன் உட்பட, நாடு முழுதும் காலியாகும் 37 ராஜ்யசபா எம்.பி., பதவிகளுக்கு, வரும் மார்ச் 16ல் தேர்தல் நடக்கவுள்ளது.

இதற்கான வேட்பு மனு தாக்கல் நேற்று துவங்கியது; மார்ச் 5 வரை வேட்பு மனு தாக்கல் செய்யலாம். முதல் நாளான நேற்று, தேர்தல் அதிகாரியான தமிழக சட்டசபை கூடுதல் செயலர் சாந்தியிடம், சுயேச்சை வேட்பாளர் பத்மராஜன் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

ராஜ்யசபா தேர்தலில் போட்டியிட, 10 எம்.எல்.ஏ.,க்கள் முன்மொழிய வேண்டும். பத்மராஜனின் வேட்பு மனுவை, எம்.எல்.ஏ.,க்கள் யாரும் முன்மொழியாததால், அவரது வேட்பு மனு தள்ளுபடி செய்யப்படும்.

வேட்பு மனு தாக்கலுக்கு இன்னும் ஒரு வாரமே இருப்பதால், தி.மு.க., – அ.தி. மு.க., வேட்பாளர்கள் விரைவில் அறிவிக்கப்பட இருப்பதாக கூறப்படுகிறது.


# இரண்டாவது நாளாக குறைந்த தங்கம் விலை!




சென்னை, பிப். 27–

இரண்டாவது நாளாக இன்றும் தங்கம் குறைந்துள்ளது. கிராமுக்கு 20 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.14,900–க்கும் சவரனுக்கு 160 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ரூ.1,19,200–க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி 295 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



# மீண்டும் மீண்டும் ஒரே பிரச்சனையை நாம் சந்திப்பதற்கு பின் இருக்கும் ஜோதிட காரணங்கள்!




நம் வாழ்க்கையில் நாம் அடிக்கடி எதிர்கொள்ளும் ஒரு சில பிரச்சனைகளுக்கும், கிரக நிலை மாற்றங்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதாக வேத ஜோதிட குறிப்புகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக கிரகங்களின் நீதிபதி என அழைக்கப்படும் சனி கிரகம், நிழல் கிரகங்களாக கருதப்படும் ராகு, கேது ஆகிய கிரகங்களின் நிலைபாடு ஆனது நம் வாழ்க்கையில் இத்தகைய தொடர்ச்சியான பிரச்சனைகளை கொண்டு வரலாம் என நம்பப்படுகிறது. தனி நபரின் வாழ்க்கையில் எதிர்மறையான விளைவுகளை கொண்டு வரும் இந்த கிரக நிலை மாற்றங்கள் குறித்தும், அதன் விளைவாக உண்டாகும் பிரச்சனைகள் குறித்தும் சற்று விரிவாக நாம் காணலாம்!

**ராகு அல்லது கேதுவுடன் சனி இணைந்து இருப்பது!**

நிழல் கிரகங்களாக குறிக்கப்படும் ராகு அல்லது கேதுவுடன் சனி இணையும் போது, நம் வாழ்க்கை நமது கர்ம வினைகளின் அடிப்படையில் கலவையான பலன்களை காணுகிறது. நன்மை – தீமை என இரண்டையும் நம் கர்ம வினைகளின் அடிப்படையில் அளிக்கும் இந்த 'கிரக சேர்க்கை', கெடு பலன்களை தொடர்ச்சியாக அளிப்பது போன்று தோன்றுகிறது. நிபுணர்கள் பார்வையில் இந்த பலன்கள், உங்கள் தவறுக்கான பாடத்தை நீங்கள் கற்கும் வரை (தவறுகளை புரிந்து, அதனை திருத்திக்கொள்ளும் வரையில்) உங்கள் வாழ்க்கையில் தொடரும்.

பரிகாரம்: ராகு அல்லது கேதுவுடன் சனி இணைவதால் உருவாகும் பிரச்சனைகளை சமாளிக்க, சனிக்கிழமைகளில் 'ஓம் சம் சனைச்சராய நமஹ' மற்றும் 'ஓம் ராம் ராகவே நமஹ' எனும் மந்திரங்களை தினமும் உச்சரித்து வரலாம்.

**ஏழாவது வீட்டில் யுரேனஸ்!**

தனி ஒரு நபரின் ஜாதகத்தில் 7–வது வீட்டில் யுரேனஸ் இடம்பெற, கூட்டாண்மை தொடர்பான பிரச்சனைகளை அடிக்கடி எழும். தொழில் வாழ்க்கையில் அமைக்கப்படும் கூட்டாண்மை மட்டும் அல்ல, குடும்ப வாழ்க்கையில் கணவன் – மனைவி இடையேயான கூட்டணியும் அடிக்கடி பிரச்சனைகளை சந்திக்கும். திருமணத்தை முடிப்பதிலும் தடைகள் நீடிக்கும்; கூட்டு முயற்சியில் செய்யும் பணிகள் சவாலாக மாறலாம், எதிர்பார்த்த பலன்களை கொண்டு வருவதில் சிரமங்கள் நீடிக்கலாம். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கும் இந்த பிரச்சனைகளை தவிர்க்க அல்லது தீர்வு காண, பிரச்சனைக்கு பின் இருக்கும் காரணத்தை புரிந்து செயல்படுவது அவசியம்.

**ராகு அல்லது கேதுவுடன் சூரியன் இணைவது!:**

தனி ஒருவரின் ஜாதகத்தில் சூரியனுடன் ராகு அல்லது கேது இணைவது, ஜாதகத்திற்கு உரியவரின் உரிமைகளை கேள்விக்குறியாக மாற்றும். அவருக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை தடுப்பதோடு, அவர்களின் திறமைக்கான அங்கீகாரம், வெகுமதிகள் கிடைப்பதிலும் சிக்கலை உண்டாக்கும். அவர்களின் கடின உழைப்புக்கான பலன் கிடைப்பதில் கால தாமதம் நீடிக்கும், குழப்பங்கள் அதிகரிக்கும். பணியிடத்தில் பிரச்சனைகள் தொடர்ச்சியாக இருக்கும், உங்கள் கருத்துக்களை தைரியமாக வெளிப்படுத்துவதில் சிக்கல் காணப்படும்.

பரிகாரம்: நிழல் கிரகங்களுடன் சூரியன் இணைவதால் காணப்படும் இந்த பிரச்சனைகளை சமாளிக்க சனிக்கிழமை விரதம் இருப்பது நல்லது. மேலும், விரத தினங்களில் இயலாதவர்களுக்கு அன்னதானம் வழங்குவது ராகுவின் தாக்கத்தை குறைத்து, மன நிறைவான வாழ்வுக்கு வழி காணலாம்!

(பொறுப்பு துறப்பு: பரிந்துரைக்கப்பட்ட பரிகாரங்கள் மத மற்றும் மரபு சார்ந்த நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை; அறிவியல் அடிப்படையில் அல்ல)

# அடுத்த மாதம் தஞ்சை செல்கிறார் விஜய்- மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு!



தஞ்சாவூர், பிப். 27–

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளை திருச்சியில் தொடங்கி அரியலூர், காஞ்சீபுரம், நாகை உள்பட பல்வேறு மாவட்டங்களில் நடத்தினார். கரூர் சம்பவத்துக்கு பின்னர் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறவில்லை.

அதன் பின்னர் ஈரோட்டில் விஜய் பங்கேற்ற பொதுக்கூட்டம் மற்றும் வேலூரில் நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி போன்றவை நடத்தப்பட்டன.

இந்த நிலையில் இதர மாவட்டங்களிலும் விஜய் மக்கள் சந்திப்பு இயக்கம் அல்லது நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் அல்லது பொதுக்கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அதன்படி தஞ்சை மாவட்டத்தில் அடுத்த மாதம் (மார்ச்) 2–வது வாரத்தில் விஜய்யின் மக்கள் சந்திப்பு அல்லது நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக இடம் தேர்வு செய்யும் பணிகளில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் ஈடுபட்டு வருகிறார்கள். இடத்தை தேர்வு செய்த பின்னர் போலீசாரிடமும் முறையாக அனுமதி கேட்டு விண்ணப்பிக்க உள்ளனர்.




## நீங்கள் அசைவ உணவுகளை அதிகமாக சாப்பிடுகிறீங்களா..? கவனம்..!



பலர் அசைவ உணவை மகிழ்ச்சியுடன் சாப்பிடுகிறார்கள். அவர்கள் அதை தங்கள் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்கிறார்கள். இறைச்சியில் புரதம், இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் பி12 போன்ற ஊட்டச்சத்துக்கள் உள்ளன. குறைந்த அளவில் உட்கொண்டால் அது நன்மை பயக்கும். சிலர் இது ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்று நினைத்து அதிகமாக சாப்பிடுகிறார்கள். பல ஆய்வுகள் இறைச்சியை அதிகமாக உட்கொள்வது ஆபத்தானது என்று எச்சரிக்கின்றன. இது கடுமையான நோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது. குறிப்பாக சிவப்பு இறைச்சி மற்றும் பதப்படுத்தப்பட்ட இறைச்சி மிகவும் தீங்கு விளைவிக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் அறிக்கையின்படி, சிவப்பு இறைச்சி மற்றும் பதப்படுத்தப்பட்ட இறைச்சி கொழுப்பை அதிகரிக்கிறது. இது இதய நோய்க்கு வழிவகுக்கிறது. இறைச்சியில் உள்ள நிறைவுற்ற கொழுப்பு இரத்த நாளங்களில் அடைப்புகளை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக, மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற கடுமையான நிலைமைகள் ஏற்படுகின்றன. இது நிமோனியா, பெருங்குடல் பாலிப்ஸ் மற்றும் நீரிழிவு நோயின் அபாயத்தையும் அதிகரிக்கிறது. தினமும் இறைச்சி சாப்பிடுவது ஆரோக்கியத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இறைச்சி உட்கொள்வது உடல் பருமன் மற்றும் வகை 2 நீரிழிவு நோயை ஏற்படுத்துகிறது. வறுத்த அல்லது அதிக கொழுப்புள்ள இறைச்சியை தொடர்ந்து உட்கொள்வது விரைவான எடை அதிகரிப்பிற்கு வழிவகுக்கும். உடல் பருமன் உயர் இரத்த அழுத்தம் மற்றும் மூட்டு பிரச்சினைகளுக்கு மூல காரணம். பதப்படுத்தப்பட்ட இறைச்சி இன்சுலின் எதிர்ப்பை அதிகரித்து நீரிழிவு நோய்க்கு வழிவகுக்கும். அதிகமாக கோழி இறைச்சி சாப்பிடுவது இரைப்பை அழற்சி மற்றும் பித்தப்பை நோயை ஏற்படுத்தும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

அமெரிக்க தேசிய உயிரி தொழில்நுட்ப தகவல் மையத்தின் அறிக்கையின்படி, இறைச்சி நுகர்வு புற்றுநோய் அபாயத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, இது பெருங்குடல் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறது. அதிக வெப்பநிலையில் இறைச்சியை சமைக்கும்போது, தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் உருவாகின்றன. இவை உடலில் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

வேகவைக்கப்படாத இறைச்சி உணவு விஷம் மற்றும் தொற்றுகளை ஏற்படுத்தும். சால்மோனெல்லா மற்றும் ஈ. கோலி போன்ற பாக்டீரியாக்கள் உடலில் நுழைந்து வாந்தி, வயிற்றுப்போக்கு மற்றும் வயிற்று வலியை ஏற்படுத்தும். குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்கள் இறைச்சி சாப்பிடுவதில் கவனமாக இருக்க வேண்டும். இறைச்சியை முறையாகவும் முழுமையாகவும் சமைப்பது தொற்றுநோய்களின் அபாயத்தைக் குறைக்கிறது.

# திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு 28 தொகுதிகள்?

சென்னை,பிப். 27–

திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு 28 தொகுதிகள் ஒதுக்கப்படலாம் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திமுக காங்கிரஸ் கூட்டணி முடிவு செய்யப்பட்டு விட்டதாகவும் இன்னும் சில நாள்களில் உடன்பாட்டை இறுதி செய்ய காங்கிரஸை திமுக மேலிடம் அழைக்கும் என்று கூறப்படுகிறது. கணிசமான அளவில் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் 28 தொகுதிகள் வரை வழங்கப்படலாம் என்று திமுக உயர் தலைவர்களில் ஒருவர் தெரிவித்ததாக தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.



மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடங்குவதற்கு முன்னதாகவே, இன்னும் ஒரு வாரத்தில் கூட்டணியிலுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் தொகுதிப் பங்கீட்டைத் திமுக முடிவு செய்து விடும் என்றும் கூறப்படுகிறது.

காங்கிரஸுக்குக் கூடுதல் தொகுதிகளை ஒதுக்கும்பட்சத்தில் கூட்டணியில் புதிதாக இணைவோருக்குத் தொகுதிகளை ஒதுக்குவது கடினமாகிவிடும் என்றும் திமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிமுகவிலிருந்து விலகித் தனித்துச் செயல்பட்டுவந்த ஓ. பன்னீர்செல்வமும் அவருடைய ஆதரவாளர்களும் இன்று சென்னையில் அறிவாலயம் வந்து முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

# வாய்ப்பு கொடுத்தால் சட்டசபை தேர்தலில் போட்டி: ஓ.பன்னீர் செல்வம் பேட்டி!

சென்னை, பிப். 27–

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுகவில் இணைந்த ஓ.பன்னீர் செல்வம் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:–

பேரறிஞர் அண்ணா ஆரம்பித்த திமுகவில் தாய்க்கழகமான திமுகவில் மகிழ்ச்சியோடு இணைத்துக்கொண்டுள்ளேன். திமுகவில் தொண்டனாகத்தான் இன்று இணைந்திருக்கிறேன். திமுக வளர்ச்சிக்கு தொண்டனாக பாடுபடுவேன். பாசத்தோடு அரவணைத்த தளபதிக்கு நன்றி.



திராவிட இயக்கம், கொள்கையை காக்க திமுகவே தலைசிறந்த இயக்கம். அரசியலில் அனைத்து மக்களையும் அரவணைக்கும் அரசியல் பண்பாடு கொண்டவர் ஸ்டாலின். தமிழக மக்களுக்கு ஸ்டாலின் சிறப்பான ஆட்சியை அளித்து வருவதை நாடு கவனிக்கிறது. பெண்கள் சிரமமின்றி குடும்பத்தை வழிநடத்த அனைத்து உதவிகளையும் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் அளிக்கிறார். திராவிட இயக்கத்தை, சித்தாந்தத்தை கட்டிக்காப்பதில் முன்னணித்தலைவராக ஸ்டாலின் திகழ்கிறார். அதிமுகவின் தற்காலிக பொதுச்செயலாளர் சர்வாதிகாரியாக நடந்துகொள்ளும் எடப்பாடி பழனிசாமி என்றும் வெல்ல முடியாத சூழலை உருவாக்கி உள்ளார்.

எடப்பாடி பழனிசாமி, பொதுச்செயலாளராக பதவி ஏற்றது முதல் தற்போது வரை அதிமுகவை அழிவுப்பாதைக்குத்தான் அழைத்து செல்கிறார். பழனிசாமிக்கு தலைமைப்பண்பு இல்லை. தென்மாவட்டத்திலிருந்து எந்த ஒரு தலைவரும் மேலே வரக்கூடாது என்பதில் கவனமாக உள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு கட்சியில் 3 முறை முதலமைச்சராக பதவி வகித்தவர், வேறொரு கட்சியில் இணைந்தது இதுவே முதல்முறை. முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்தது வரலாற்றில் பதிவானது.

ஓபிஎஸ் ஆதரவாளர்களான மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம் ஆகியோர் ஏற்கனவே திமுகவில் இணைந்த நிலையில் தற்போது ஓபிஎஸ்–ம் திமுகவில் இணைந்தார். ஓபிஎஸ் மகன் ரவீந்திரநாத், எம்.எல்.ஏ ஐயப்பன் உள்ளிட்ட ஆதரவாளர்களும் திமுகவில் இணைந்துள்ளனர்,

# சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரியை நியமிக்க பரிந்துரை!

சென்னை, பிப். 27–

சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரியை நியமிக்க கொலிஜியம் பரிந்துரை வழங்கியுள்ளது. சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மார்ச் 5ம் தேதி ஓய்வு பெறுகிறார். மார்ச் 5ல் எம்.எம்.ஸ்ரீவஸ்தவா ஓய்வு பெறும் நிலையில் புதிய தலைமை நீதிபதி பெயரை கொலிஜியம் பரிந்துரைத்துள்ளது. கேரளா ஐகோர்ட் நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதியாக பரிந்துரைத்தது. குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பித்ததும் புதிய தலைமை நீதிபதி பதவி ஏற்றுக்கொள்வார். நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி, கடந்த 2016 ஆம் ஆண்டு மத்திய பிரதேச உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாகவும், 2018 ஆம் ஆண்டு நிரந்தர நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். கடந்த 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கேரள உயர்நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட அவரை சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைத்துள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த தர்மாதிகாரி மகாராஷ்டிரா மாநிலம், நாக்பூர் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றவர். 1992 முதல் வழக்கறிஞராக மத்திய பிரதேச உயர்நீதிமன்றத்தில் பணியாற்றினார்



2000ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை வருமான வரித்துறை, வங்கி மற்றும் மத்திய அரசு துறைகளில் வழக்கறிஞராக பணியாற்றினார். 2016–ல் மத்திய பிரதேச உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாகவும், 2018–ல் நிரந்தர நீதிபதியாகவும் பணியாற்றினார். 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தற்போதைய தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஷ்தவாவின் பதவிக்காலம் மார்ச் 5 உடன் நிறைவடையும் நிலையில் குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பித்ததும் புதிய தலைமை நீதிபதி பதவி ஏற்றுக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# போலீஸ் நிலையங்களில் சிசிடிவி கேமரா; மாநில அரசுகளுடன் மத்திய அரசு விரைவில் ஆலோசனை!



புதுடெல்லி, பிப். 27–

போலீஸ் நிலையங்களில் சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமராக்கள் செயல்படாதது தொடர்பாக கடந்த 2018–ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு தாமாக முன்வந்து பொதுநல வழக்காக விசாரித்தது. போலீஸ் நிலையங்களில் மனித உரிமை மீறல்களை தடுக்க சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமராக்கள் செயல்பட உரிய நடவடிக்கை எடுக்கவும், கேமரா பொருத்தப்படாத போலீஸ் நிலையங்களில் அதனை நிறுவ வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தது.

அதேபோன்று சி.பி.ஐ., அமலாக்கத்துறை மற்றும் தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.) உள்ளிட்ட புலனாய்வு நிறுவனங்களின் அலுவலகங்களிலும் கேமராக்களை நிறுவ மத்திய அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும், நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் இடங்கள், பிரதான வாயில், லாக்–அப் அறைகள்,


தாழ்வாரங்கள், லாபி, வரவேற்பு அறை மற்றும் லாக்–அப் அறைகளுக்கு வெளியே உள்ள பகுதிகளிலும் கேமராக்கள் பொருத்தப்படுவதை மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் உறுதி செய்ய வேண்டும் என்றும், இரவிலும் ஆடியோ மற்றும் வீடியோ காட்சிகள் பதிவாகும் வகையிலும், ஓராண்டுகள் வரை பதிவுகளை சேமித்து வைக்கும் வகையிலும் கேமராக்கள் நிறுவப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில் அந்த வழக்கு நீதிபதிகள் விக்ரம்நாத் மற்றும் சந் தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிமன்றத்துக்கு உதவ நியமிக்கப்பட்ட மூத்த வக்கீல் சித் தார்த் தேவ், 'சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி மத்திய அரசு, மாநில அரசு களுடன் ஒரு கூட்டத்தை நடத்தியது. இதில் சில மாநிலங்கள் பங்கேற்கவில்லை. அடுத்த கூட்டம் மார்ச் 14–ந்தேதி நடக்கிறது. இந்த கூட்டத்துக்கு பின்பு அறிக்கை தாக்கல் செய்யப்படும்' என்றார். இதை ஏற்றுக்கொண்டு வழக்கு விசாரணை மார்ச் 23–ந்தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.

# அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் உயர்வு: தமிழ்நாடு அரசு அதிரடி!

சென்னை, பிப். 27–

சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலர்களுக்கான ஓய்வூதியதியத்தை உயர்த்தி தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, "சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலர்களுக்கான ஓய்வூதியம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரத்து 400 ரூபாயாக வழங்கப்படும். மேலும், பணி நிறைவின்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டு மொத்தத் தொகை ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.



அலுவலர் குழு 2017 இன் பரிந்துரையின் அடிப்படையில் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள், வனக் களப்பணியாளர்கள். அங்கன்வாடி உதவியாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு சிறப்பு காலமுறை ஓய்வூதியம் மற்றும் ஒட்டுமொத்த தொகை வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு சிறப்பு ஓய்வூதியம் மற்றும் ஒட்டுமொத்த தொகை உயர்த்தி வழங்கிடவும், குடும்ப ஓய்வூதியம் மற்றும் உயிரிழக்க நேரிட்டால் இறுதிச் சடங்கிற்கான செலவினம் வழங்கியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதன்படி சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு சிறப்பு ஓய்வூதியம், ஒட்டுமொத்த தொகையினை உயர்த்தியும், அப்பணியாளர்கள் ஓய்விற்கு பின் உயிரிழக்க நேரிட்டால் சிறப்பு குடும்ப ஓய்வூதியம் மற்றும் இறுதிச் சடங்கிற்கான செலவினத் தொகை கீழ்கண்டவாறு வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் காணொலி காட்சி வாயிலாக 7 வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் உருவாக்கப்பட்டுள்ள கணிணிமையமாக்கப்பட்ட தானியங்கி ஒட்டுநர் தேர்வுத் தளங்களை திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்ட வட்டார போக்குவரத்து தானியங்கி ஓட்டுநர் தேர்வு தளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, திண்டுக்கல் மாநகராட்சி மேயர் ஜோ.இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராசப்பா, வட்டார போக்குவரத்து அலுவலர் கண்ணன் ஆய்வாளர் த.சண்முக ஆனந்த் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## மத்திய அரசில் தொழில் 50 பழகுநர் காலியிடங்கள்




நிறுவனத்தின் பெயர்: பாரதிய நபிகிய வித்யுத் நிகம் லிமிடெட், கல்பாக்கம்

அறிவிப்பு எண்: பவானி/ஹெச்ஆர்/டிஏ–IV/2026 2027

வேலை வகை: மத்திய அரசு வேலைகள்

வேலைவாய்ப்பு வகை: பயிற்சி பயிற்சி

காலம்: ஒரு வருடம்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 50 வர்த்தக பயிற்சி பதவிகள்

வேலை செய்யும் இடம்: கல்பாக்கம்

தொடக்க தேதி: 25.02.2026

கடைசி தேதி: 16.03.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://bhavini.nic.in/

# தாம்பரம் - சென்னை கடற்கரை இடையே கூடுதலாக 20 விரைவு மின்சார ரயில்கள் இயக்கம்!



சென்னை, பிப். 27–

தாம்பரம் – சென்னை கடற்கரை இருமார்க்கமாக கூடுதலாக 20 விரைவு மின்சார ரயில்கள் இன்று முதல் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக தெற்கு ரயில்வே சென்னை கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது; சென்னை கடற்கரை – தாம்பரம் வழித்தடத்தில் பயணிகள் வசதிக்காகவும், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தவும் கூடுதலாக 20 விரைவு மின்சார ரயில் சேவைகள் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் இயக்கப்பட உள்ளது. இந்த விரைவு மின்சார ரயில்களுக்கு மாம்பலம், கிண்டி, எழும்பூர் ஆகிய நிறுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளது. தாம்பரத்தில் இருந்து கடற்கரைக்கும், கடற்கரையில் இருந்து தாம்பரத்திற்கும் 1 மணி நேரத்தில் சென்றடையும்.

இந்த 20 விரைவு மின்சார ரயில்களுக்கான கால நேர அட்டவணையின் விவரம் வருமாறு:– கடற்கரை –தாம்பரம்: 7.50, 8.20, 9.20, 9.50, 10.15 5.15, 5.30, 6.20, 7.10, 8. தாம்பரம் கடற்கரை: காலை 7.40, 8.10, 9.10, 9.40, 10.05, 11.10, மதியம் 12. மாலை 6.05, 6.50, இரவு 7.35. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




## ஐஸ்வர்யா ரஜினிகாந்த்தின் அடுத்த படம்.. இசையமைக்கும் யுவன் சங்கர் ராஜா!



நடிகர் தனுஷ் நடித்த '3' படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் இயக்குநராக அறிமுகமானவர் நடிகர் ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யா. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்றை பெற்றதை தொடர்ந்து 'வை ராஜா வை', 'லால் சலாம்' ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.

இதனை தொடர்ந்து ஐஸ்வர்யா தற்போது புதிய படம் ஒன்றை இயக்க ஒப்பந்தமாகி உள்ளதாக நேற்று அறிவிப்பு வெளியானது. கண்ணன் ரவி குரூப்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 9–வது படத்தை ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்க உள்ளார்.

ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கும் புதிய படத்தில் நடிக்க உள்ள நடிகர்கள் குறித்த எந்த அறிவிப்பும் வெளியாகாத நிலையில், தற்போது இசையமைப்பாளர் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கும் படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்க உள்ளார். இதற்கு முன்னதாக 'வை ராஜா வை' படத்தில் ஐஸ்வர்யா– யுவன் சங்கர் ராஜா கூட்டணி இணைந்து பணியாற்றியது. தற்போது இரண்டாவது முறையாக இருவரும் இணைந்து பணியாற்ற உள்ளனர்.







# 3 முறை முதல்வர் ஓபிஎஸ் திமுகவில் சரண்!

சென்னை, பிப். 27–

முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலினை ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து திமுகவில் தன்னை இணைத்துக்கொண்டார். அப்போது அவருக்கு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். ஓபிஎஸ் உடன் அவரது மகன் மற்றும் ஆதரவாளர்களும் திமுகவில் இணைந்து கொண்டனர். முன்னதாக அமைச்சர் சேகர்பாபு–ஓ.பன்னீர்செல்வம் இருவரும் ஒரே காரில் அண்ணா அறிவாலயம் வந்தது குறிப்பிடத்தக்கது.

திமுகவில் இணைந்துள்ள ஓ.பன்னீர்செல்வத்துக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்பட உள்ளது. மேலும் அவர் மீண்டும் போடி தொகுதியில் போட்டியிட உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அவர் தலைமை செயலகம் சென்று சட்டசபை செயலாளரிடம் தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து கடிதம் வழங்கினார். இவருடன் ஐயப்பன் எம்.எல்.ஏ.வும் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதனை தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வம் தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ய உள்ளார். அவருடன் அவரது ஆதரவு எம்.எல்.ஏ. உசிலம்பட்டி அய்யப்பனும் பதவியை ராஜினாமா செய்ய உள்ளார்.

**3 முறை முதல்–அமைச்சர்**

அ.தி.மு.க. ஆட்சியில் 3 முறை முதல்–அமைச்சராக இருந்தவர் ஓ.பன்னீர்செல்வம். ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்தவர். ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் அ.தி.மு.க. பல சிக்கல்களை சந்தித்தது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் துணை முதல்–அமைச்சராகவும், அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தார். அதன்பின்னர் கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினையால் அதிரடியாக அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டார். வைத்திலிங்கம், மனோஜ்பாண்டியன், அய்யப்பன் உள்ளிட்ட எம்.எல்.ஏ.க்களும் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு அளித்தனர்.

இதனையடுத்து அ.தி.மு.க.வை மீட்க சட்ட நடவடிக்கை எடுத்தார். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் பா.ஜனதா ஆதரவுடன் சுயேச்சையாக களமிறங்கினார். ஓரளவு வாக்குகளை பெற்றிருந்தாலும் அவர் தோல்வி அடைந்தார்.

**தி.மு.க.வில் ஆதரவாளர்கள் ஐக்கியம்**

அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக்கழகம் என்ற பெயரில் அமைப்பை நடத்தி வருகிறார். அவரை மீண்டும் அ.தி.மு.க.வில் சேர்க்க வாய்ப்பே இல்லை என்று எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். பா.ஜனதாவும் கண்டுகொள்ளவில்லை. ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு தெரிவித்து வந்த அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தேசிய ஜனநாயக கூட்டணியிலும், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் த.வெ.க.விலும் சேர்ந்துவிட்டனர்.

எனவே ஓ.பன்னீர்செல்வம் என்ன செய்யப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது. இதற்கிடையே அவரது ஆதரவாளர்கள் வைத்திலிங்கம், மனோஜ்பாண்டியன் உள்ளிட்டோர் தி.மு.க.வில் ஐக்கியமாகினர். மேலும் பண்ருட்டி ராமச்சந்திரன் தனிக்கட்சி தொடங்கி விட்டார். ஜே.சி.டி.பிரபாகர் த.வெ.க.வில் இணைந்துவிட்டார்.

இந்த நிலையில், பல்வேறு கட்ட ஆலோசனைகளுக்கு பிறகு ஓ.பன்னீசெல்வம் திமுகவில் இணைந்துள்ளார்.

# மும்பையில் மார்ச் 16 - 18 வரை கன்டென்ட் இந்தியா நிகழ்ச்சி!

சென்னை, பிப். 27–




வளர்ந்து வரும் ஓ.டி.டி., பயன்பாடு, பிராந்திய உள்ளடக்க உற்பத்தியை விரிவுபடுத்துதல், எல்லை தாண்டிய ஒத்துழைப்பு, அதிகரித்து வரும் முதலீட்டால் ஈர்க்கப்பட்டு, ‘கன்டென்ட் இந்தியா 2026’ நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது. இந்நிகழ்ச்சி, மஹாராஷ்டிர மாநிலம், மும்பையில் வரும் மார்ச் 16 முதல், 18ம் தேதி வரை நடக்கிறது. ‘டிஷ் டிவி’யும், ‘சி 21 மீடியா’வும் இணைந்து, ‘கன்டென்ட் இந்தியா 2026’ நிகழ்ச்சியை நடத்துகின்றன. முன்னணி ஒளிபரப்பாளர்கள், ஸ்ட்ரீமிங் தளங்கள், திரைப்பட ஸ்டுடியோக்கள், தயாரிப்பு நிறுவனங்கள், முதலீட்டு நிறுவனங்களின் உயர் நிர்வாகிகள் பங்கேற்க உள்ளனர்.

இது குறித்து, ‘டிஷ்’ தொலைக்காட்சியின் இந்திய தலைமை செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர் மனோஜ் தோபால் கூறியதாவது:

கன்டென்ட் இந்தியா, ஒரு அடிப்படை தொழில் துறை தேவையை நிவர்த்தி செய்வதற்காக உருவாக்க ப்பட்டது.


இந்தாண்டு மூன்று நாட்கள் நடக்கும் இந்நிகழ்ச்சி அர்த்தமுள்ள உரையாடல், ஒத்துழைப்பு, நீண்ட கால கூட்டாண்மைகளை செயல்படுத்துவதில் உறுதியாக உள்ளது.

கன்டென்ட் இந்தியா வாயிலாக படைப்பாளிகள், தயாரிப்பாளர்கள், தளங்கள், ஸ்டுடியோக்கள், வினியோகஸ்தர்கள், முதலீட்டாளர்கள் எங்களுடன் சேர்ந்து, தொழில் துறையின் அடுத்தகட்ட வளர்ச்சியை வடிவமைக்க உதவுமாறு அழைக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ‘பிரதமர் மோடி வந்து சென்ற பின்னரே அ.தி.மு.க.,வுடன் தொகுதி பங்கீடு’: தமிழக பா.ஜ.,!

சென்னை, பிப். 27–



தமிழக சட்டசபை தேர்தலுக்காக, பா.ஜ., சார்பில், கட்சியின் தலைமை தேர்தல் அலுவலகம், சென்னை அமைந்தகரையில் திறக்கப்பட்டது. அலுவலகத்தை மத்திய இணை அமைச்சர் முருகன் திறந்து வைத்தார். நிகழ்ச்சி யில் தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதாவது:–

இந்த விழாவுக்கு வந்துள்ள பா.ஜ.,வினரில் 20 பேர், எம்.எல்.ஏ.,க்கள் ஆகலாம்; இறைவன் அருள் இருந்தால், அமைச்சர்களாக கூட வரலாம். அரசு ஊழியர்களுக்கு எதிரானது, தி.மு.க., ஆட்சி. தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு சரியில்லை; டி.ஜி.பி.,யை கூட நியமிக்க முடியாத அளவிற்கு இந்த ஆட்சி இருக்கிறது; நோட்டை கொடுத்து ஓட்டுகளை வாங்கி விடலாம் என தெம்பாக இருக்கின்றனர்.

தமிழகம் முழுதும் ஓட்டுக்கு பணம் கொடுப்பதற்காக, தி.மு.க.,வினர் ஆங்காங்கே பணத்தை பதுக்கி வைத்துள்ளனர். புத்தகம் எடுத்து செல்ல வேண்டிய மாணவர்கள், கஞ்சா எடுத்து செல்கின்றனர்; ஒவ்வொருவரின் பையிலும் பீர் பாட்டில் இருக்கிறது. டாஸ்மாக்கில் விற்பனை அதிகமாக நடைபெறவில்லை என்று தான் தி.மு.க., அரசு கவலைப்படுகிறது. பிரதமர் மோடி தமிழகத்திற்கு 15 லட்சம் கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்; 11 வந்தே பாரத் ரயில்கள், 11 மருத்துவக் கல்லுாரிகள் உட்பட பல திட்டங்களை கொடுத்து இருக்கிறார். இவற்றையெல்லாம் சரியான முறையில் மக்களின் பார்வைக்கு எடுத்து செல்ல வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். பின்னர் பேட்டியளித்த நயினார் நாகேந்திரன், ‘‘முதல்வர் ஸ்டாலினுக்கு ஆட்சி நடத்துவதற்கான திறமை இல்லை; மக்களிடம் பொய்யை சொல்லி, ஓட்டுகள் வாங்கி விடலாம் என நினைக்கிறார். புதிதாக கட்சி துவக்கும் சசிகலாவால், தே.ஜ., கூட்டணியில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது; அவருடன் எந்த பேச்சும் நடத்தவில்லை. ‘‘பிரதமர் மோடி தமிழகம் வந்து சென்ற பின் தான், அ.தி.மு.க.,வுடன் தொகுதி பங்கீடு பேச்சு நடத்த உள்ளோம். பா.ஜ., சார்பில் அ.தி.மு.க.,விடம் எவ்வித டிமாண்டும் வைக்கவில்லை,” என்றார்.

# பிரிட்டன் எம்.பி.,க்கு ரெட் கார்னர் நோட்டீஸ் வங்கதேச நீதிமன்றம் உத்தரவு!

டாக்கா, பிப். 27–



ஐரோப்பிய நாடான லண்டனின் ஹாம்ப்ஸ்டெட் மற்றும் ஹைகேட் தொகுதியில் தொழிலாளர் கட்சி சார்பில் எம்.பி.,யாக இருப்பவர் துலிப் சித்திக். வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் மருமகளான இவர், 2024 – 25ல் பிரிட்டன் கருவூலத்தின் பொருளாதாரச் செயலராகவும், நகர அமைச்சராகவும் பதவி வகித்தவர்.

வங்கதேசத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து, லண்டனில் வசிக்கும் இவர் மீதும் ஊழல் புகார்கள் சுமத்தப்பட்டன. இதன் காரணமாக தன் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். ஹசீனாவுடன் தொடர்புடைய மூன்று வெவ்வேறு ஊழல் வழக்குகளில் துலிப் சித்திக்கிற்கு ஏற்கனவே ஆறு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஷேக் ஹசீனாவின் செல்வாக்கைப் பயன்படுத்தி துலிப் சித்திக், டாக்காவின் உயர்தர பகுதியான குல்ஷான் – –2–ல் உள்ள ஒரு தனியார் நிறுவனத்திற்கு நிலம் வழங்குவதில் மோசடி செய்ததாக, அந்நாட்டு ஊழல் தடுப்பு ஆணையம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த புகாரில் இன்டர்போல் உதவியுடன், ரெட் கார்னர் எனப்படும் தேடப்படும் குற்றவாளியாக நோட்டீஸ் பிறப்பிக்க டாக்கா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த ரெட் கார்னர் நோட்டீஸ் உத்தரவால், துலிப் சித்திக் கைது செய்யப்படுவதற்கான சர்வதேச நடவடிக்கைகள் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அந்தோணியார் திருவிழா - ராமேசுவரத்தில் இருந்து கச்சத்தீவுக்கு புறப்பட்டு சென்ற 4 ஆயிரம் பக்தர்கள்!

ராமேசுவரம், பிப். 27–



தமிழகத்தின் ராமேசுவரத்தில் இருந்து 12 கடல் மைல் தொலைவிலும், இலங்கை நெடுந்தீவில் இருந்து 16 கடல் மைல் தொலைவில் அமைந்து உள்ளது கச்சத்தீவு. இருநாடுகளின் கடல் பரப்பில் நடுவே அமைந்துள்ள இத்தீவு சுமார் 285 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்த கச்சத்தீவு கடந்த 1974–ம் ஆண்டு இலங்கைக்கு வழங்கப்பட்டது. அப்போது இந்த தீவில் உள்ள அந்தோணியார் தேவாலய திருவிழாவுக்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழக மீனவர்களை அனுமதிப்பது, மீன்பிடிப்பின்போது தமிழக மீனவர்கள் தங்களது வலைகளை உலர்த்திக் கொள்ளவும், ஓய்வெடுக்கவும் இத்தீவை பயன்படுத்திக் கொள்வது என்ற ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டது.

ஆனால் இலங்கையில் நடந்த உள்நாட்டு போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தமிழக மீனவர்கள் வலைகளை உலர்த்திக் கொள்ள இலங்கை அரசு அனுமதி மறுத்துவிட்டது. ஆனால் வருடந்தோறும் நடைபெறும் கச்சத்தீவு அந்தோணியார் திருவிழாவிற்கு மட்டும் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் தமிழக மீனவர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அதன்படி இந்த ஆண்டுக்கான கச்சத்தீவு திருவிழா இன்று (27–ந் தேதி) மாலை தொடங்குகிறது. இந்த விழாவில் பங்கேற்க விரும்புவோர் கடந்த ஒரு மாதம் முன்பே ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகத்திடம் விண்ணப்பம் செய்திருந்தனர். அதனை அதிகாரிகள் பரிசீலனை செய்து கச்சத்தீவு திருவிழாவில் பங்கேற்க மொத்தம் 4 ஆயிரம் பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இன்று மாலை விழா தொடங்குவதை முன்னிட்டு கச்சத்தீவு செல்ல ராமேசுவரம் துறைமுகத்துக்கு அதிகாலையிலேயே பக்தர்கள் வருகை தந்தனர். காலை 6 மணியளவில் மாவட்ட அதிகாரிகள் பக்தர்களின் ஆவணங்களை சரிபார்த்து படகுகளில் ஏற அனுமதிக்கப்பட்டனர். கடலில் பயணிக்கும் 4 ஆயிரம் பேருக்கும் பாதுகாப்பு கவச உடை வழங்கப்பட்டது. துறைமுகத்தில் இருந்து இன்று காலை 7 மணியளவில் கச்சத்தீவுக்கு 118 விசைப்படகுகள், நாட்டுப்படகுகளில் 3 ஆயிரத்து 31 ஆண்கள், 780 பெண்கள், 185 சிறுவர்–சிறுமிகள் என 4 ஆயிரம் புறப்பட்டு சென்றனர். கச்சத்தீவு பக்தர்களின் பயணத்தை மாவட்ட வருவாய் அலுவலர் சங்கர நாராயணன், ராமேசுவரம் உதவி போலீஸ் சூப்பிரண்டு ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

ஒவ்வொரு படகுகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பக்தர்கள் ஏற்றப்பட்டனர். படகுகளில் ஏறிய அவர்கள் உற்சாகத்துடன் கச்சத்தீவுக்கு புறப்பட்டு சென்றனர். இன்று பிற்பகலுக்குள் அனைத்து படகுகளும் கச்சத்தீவுக்கு சென்றடையும். கச்சத்தீவு திருவிழாவையொட்டி இந்திய கடல் எல்லையில் கடற்படை, கடலோர காவல் படையினர், உளவுத்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். இதே போல் கச்சத்தீவு மற்றும் இலங்கை கடல் எல்லையிலும் அந்நாட்டு கடற்படை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது.

அதேபோல் கச்சத்தீவு கடற்கரையில் இலங்கை ராணுவம் மற்றும் போலீசாரின் சோதனைக்கு பின்னர் இருநாட்டு பக்தர்களும் திருவிழா நடைபெறும் பகுதிக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். அங்கு பக்தர்கள் அமருவதற்கும், ஓய்வெடுக்கவும் பிரமாண்ட பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா இன்று மாலை 5 மணிக்கு தொடங்குகிறது. அப்போது அந்தோணியார் உருவம் பதித்த கொடியை நெடுந்தீவு பங்குசந்தை பத்திநாதன், ராமேசுவரம் வேர்க்கோடு பங்குத்தந்தை அசோக் வினோ ஆகியோர் ஏற்றி வைக்கிறார்கள். தொடர்ந்து சிலுவைப் பாதை திருப்பலி நடைபெறுகிறது. இரவு அந்தோணியார் சொரூபத்துடன் மின்னொளியில் அலங்கரிக்கப்பட்ட தேர்பவனி நடக்கிறது. 2–ம் நாளான நாளை (சனிக்கிழமை) சிறப்பு திருப்பலி நடக்கிறது.

அதனை தொடர்ந்து கொடியிறக்கம் நடக்கிறது. விழா முடிந்த பின் இந்திய பக்தர்கள் நாடு திரும்புகிறார்கள். கச்சத்தீவு திருவிழாவை முன்னிட்டு ராமேசுவரம் கடல் பகுதியில் 5 நாட்களுக்கு மீன்பிடிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏராளமான படகுகள் கடலுக்கு செல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கச்சத்தீவு திருவிழா வையொட்டி, உச்சிப்புளியில் உள்ள ஐ.என்.எஸ். பருந்து கடற்படை விமான தளத்தில் இருந்து 2 ஹெலிகொப்டர்களும், டார்னியர் விமானமும் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றன.

# கம்யூ., ஆதரவு மாணவர்கள் போலீசாருடன் மோதல்; 51 பேர் கைது; ஜவஹர்லால் நேரு பல்கலையில் விடிய விடிய போராட்டம்!



புதுடில்லி, பிப். 27–

டில்லியில் கல்வித்துறை அமைச்சகத்தை நோக்கி பேரணி நடத்த முயன்ற ஜேஎன்யு மாணவர்கள் மற்றும் போலீசார் இடையே மோதல் ஏற்பட்டது. இதில், இருதரப்பினர் காயமடைந்தனர். 51 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

புதிய யுஜிசி விதிகளை அமல்படுத்த வேண்டும், ரோகித் வெமுலா சட்டம் கொண்டுவர வேண்டும், துணைவேந்தர் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மத்திய கல்வித்துறை அமைச்சகத்தை நோக்கி, ஜேஎன்யு மாணவர்கள் நேற்று பேரணி செல்ல முயன்றனர்.

பேரணி செல்ல முயன்ற மாணவர்கள் அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆதரவு கொண்ட அமைப்புகளை சேர்ந்தவர்கள்.

பேரணியை போலீசார் தடுத்து நிறுத்தினர். அப்போது, மாணவர்கள் தடுப்புகளைச் சேதப்படுத்தியதாகவும், கற்கள், காலணிகள் மற்றும் கொடிக்கம்புகளை வீசி தாக்குதல் நடத்தினர். சிலர் போலீசாரை கடித்தும் வைத்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, ஜேஎன்யு மாணவர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் 4 பேர் உள்பட 51 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த கைது நடவடிக்கையைக் கண்டித்து டில்லியில் விடிய விடிய ஜேஎன்யு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அசம்பாவித சம்பவங்களை தவிர்க்க பல்கலை வளாகத்தில் அதிக எண்ணிக்கையிலான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மேலும், தடுப்புகளை அமைத்து கண்காணித்து வருகின்றனர்.

முன்னதாக, பிப்ரவரி மாத தொடக்கத்தில் அம்பேத்கர் நூலகத்தில் இருந்த கண்காணிப்பு உபகர ணங்களைச் சேதப்படு த்தியதால் கம்யூனிஸ்ட் ஆதரவு மாணவர் சங்க நிர்வாகிகள் ஐந்து பேர் நீக்கப்பட்டனர். அதன் தொடர்ச்சியாகவே இந்த போராட்டம் நடத்தப்பட்டதாக, பல்கலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# பாஜகவின் தேர்தல் வெற்றிக்கு தான் பயன்பட்டது மதுபான ஊழல் வழக்கு... கெஜ்ரிவால் விடுதலை!



டெல்லி, பிப். 27–

டெல்லி மதுபான ஊழல் வழக்கில் முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆம் ஆத்மி வகுத்த புதிய மதுபான கொள்கையில் சதி திட்டம் அல்லது குற்றவியல் நோக்கம் இல்லை என கூறி மாஜி முதல்வர் கெஜ்ரிவால் மற்றும் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா ஆகியோரை விடுதலை செய்து டெல்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

டெல்லியில் ஆம் ஆத்மி ஆட்சியில் இருந்தபோது கடந்த 2021 நவம்பரில் புதிய மதுபான கொள்கை அமல்படுத்தப்பட்டது. இதில் ஊழல் நடந்ததாகச் சொல்லி வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கின் காரணமாகவே கெஜ்ரிவால் தேர்தல் காலத்தில் பிரச்சாரத்திற்குக் கூட செல்ல முடியாமல் கைதும் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார். உச்ச நீதிமன்றம் இதில் தலையிட வேண்டி இருந்தது.

இதற்கிடையே முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், அவரது துணை முதல்வர் மணீஷ் சிசோடியா ஆகியோரை டெல்லி நீதிமன்றம் புதிய மதுபானக் கொள்கை தொடர்பான ஊழல் வழக்கில் இருந்து விடுவித்துள்ளது. “இந்த கலால் கொள்கையில் எந்தவொரு சதித்திட்டமோ அல்லது குற்றவியல் நோக்கமோ இல்லை,’’ என்று நீதிமன்றம் தெரிவித்தது. ஆம் ஆத்மி அரசு 2021–22ல் அறிமுகப்படுத்திய இந்தக் கொள்கை பின்னர் ரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# காலமானார்...!



மறைந்த மீனாட்சி மைந்தன் அமரர். V. N. சிதம்பரம் அவர்களின் மனைவி கமலா சிதம்பரம் நம்மை விட்டு மறைந்தால். அவர் ஆன்மா சாந்தி அடையட்டும். மரியாதைக்குரியதிரு V.N.CT அவர்களின் மனைவியும் எங்கள் தாயாருமான திருமதி கமலா சிதம்பரம் அவர்கள் இன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்கள் என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களின் இறுதி சடங்குகள் பிப்ரவரி 27ம் தேதி வெள்ளிக்கழமை மாலை 5 மணி அளவில் ராங்கியத்தில் எங்கள் இல்லத்தில் நடைபெரும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். சவண்டியும் மார்ச் 1 ம் தேதி ஞாயற்றுகிழமை வைத்திருக்கிறது. V.N.CT வள்ளியப்பன் V.N.CT நாகு சிதம்பரம் V.N.CT கணேஷ்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020